# நம்மாழ்வார் அருளிச் செய்த
# திருவாய்மொழி
# இரண்டாம் பத்து

## ஐந்தாம் திருவாய்மொழி - அந்தாமத்தன்பு
## ஈச்வரன் தனது திவ்யபூஷண திவ்யாயுத திவ்யாவயவ ஸௌந்தர்யங்களோடு வந்து கலக்க, அதனால் ஆழ்வார் துன்பம் தீர்ந்து இன்புறுதல்

** அந்தாமத்து அன்பு செய்து * என் ஆவி சேர் அம்மானுக்கு *
அந்தாம வாண்முடி சங்கு * ஆழி நூல் ஆரம் உள **
செந்தாமரைத் தடங்கண் * செங்கனி வாய் செங்கமலம் *
செந்தாமரை அடிகள் * செம்பொன் திரு உடம்பே 1

திரு உடம்பு வான் சுடர் * செந்தாமரைக் கண் கை கமலம் *
திருவிடமே மார்பம் * அயன் இடமே கொப்பூழ் **
ஒருவிடமும் எந்தை பெருமாற்கு * அரனேயோ! *
ஒருவிடம் ஒன்று இன்றி * என்னுள் கலந்தானுக்கே 2

என்னுள் கலந்தவன் * செங்கனி வாய் செங்கமலம் *
மின்னும் சுடர் மலைக்குக் * கண் பாதம் கை கமலம் **
மன்னு முழு ஏழ் உலகும் * வயிற்றின் உள *
தன்னுள் கலவாதது * எப்பொருளும் தான் இலையே 3

எப்பொருளும் தானாய் * மரதகக் குன்றம் ஒக்கும் *
அப்பொழுதைத் தாமரைப் பூக் * கண் பாதம் கை கமலம் **
எப்பொழுதும் நாள் திங்கள் * ஆண்டு ஊழி ஊழி தொறும் *
அப்பொழுதைக்கு அப்பொழுது * என் ஆரா அமுதமே 4

ஆரா அமுதமாய் * அல்லாவி உள்கலந்த *
காரார் கருமுகில் போல் * என் அம்மான் கண்ணனுக்கு **
நேரா வாய் செம்பவளம் * கண் பாதம் கை கமலம் *
பேர் ஆர நீள் முடி நாண் * பின்னும் இழை பலவே 5

பல பலவே ஆபரணம் * பேரும் பல பலவே *
பல பலவே சோதி * வடிவு பண்பு எண்ணில் **
பல பல கண்டுண்டு * கேட்டுற்று மோந்து இன்பம் *
பல பலவே ஞானமும் * பாம்பணை மேலாற்கேயோ! 6

பாம்பணை மேல் பாற்கடலுள் * பள்ளி அமர்ந்ததுவும் *
காம்பணை தோள் பின்னைக்கா * ஏறு உடன் ஏழ் செற்றதுவும் **
தேம்பணைய சோலை * மராமரம் ஏழ் எய்ததுவும் *
பூம் பிணைய தண்துழாய்ப் * பொன் முடி அம்போர் ஏறே 7

பொன் முடி அம்போர் ஏற்றை * எம்மானை நால் தடந்தோள் *
தன் முடிவு ஒன்று இல்லாத * தண்துழாய் மாலையனை **
என் முடிவு காணாதே * என்னுள் கலந்தானை *
சொல் முடிவு காணேன் நான் * சொல்லுவது என்? சொல்லீரே 8

சொல்லீர் என் அம்மானை * என்னாவி ஆவி தனை *
எல்லை இல் சீர் * என் கரு மாணிக்கச் சுடரை **
நல்ல அமுதம் * பெறற்கு அரிய வீடுமாய் *
அல்லி மலர் விரை ஒத்து * ஆண் அல்லன் பெண் அல்லனே 9

ஆண் அல்லன் பெண் அல்லன் * அல்லா அலியும் அல்லன் *
காணலும் ஆகான் * உளன் அல்லன் இல்லை அல்லன் **
பேணுங்கால் பேணும் * உரு ஆகும் அல்லனும் ஆம் *
கோணை பெரிது உடைத்து * எம் பெம்மானைக் கூறுதலே 10

** கூறுதல் ஒன்று ஆராக் * குடக் கூத்த அம்மானை *
கூறுதலே மேவிக் * குருகூர்ச் சடகோபன் **
கூறின அந்தாதி * ஓர் ஆயிரத்துள் இப்பத்தும் *
கூறுதல் வல்லார் உளரேல் * கூடுவர் வைகுந்தமே 11

**ஆழ்வார் திருவடிகளே சரணம்**